Clr.No.19

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

------

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUVOTTIYUR

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | Case No. CC.178/2022 |
| Sessions | : | |
| Deposition of witness for | : | Prosecution PW 1 |
| Name | : | ஆறுமுகம், சிறப்பு உதவி ஆய்வாளர், சின்ன ஸ்டான்லி காவல் நிலையம். |
| Father's/Husband's Name | : | |
| Village | | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 58 |

Date : 30.04.2024

(Solemnly affirmed before this court under act X of 1969)

எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்.

முதல் விசாரணை:-

1. நான் தற்போது சின்ன ஸ்டான்லி மருத்துவமனை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2022 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் திருவொற்றியூர் போக்குவரத்து பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 14.07.2022 அன்று மதியம் 02 மணியிலிருந்து இரவு 10.00 மணி வரை போக்குவரத்து சுற்றுக்காவல் வாகனத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். மாலை சுமார் 3.05 மணி அளவில் பீச் ரோடு அருகே மேற்படி

வாகனத்தில் பணியில் இருந்த பொழுது இருசக்கர வாகனத்தில் சென்ற ஒரு நபர் எக்ஸ்பிரஸ் ஆலையில் அமைந்துள்ள கிருஷ்ணா குப்பம் அருகே விபத்து ஏற்பட்டுள்ளதாக தகவல் தெரிவித்தார்.

2. நான் உடனடியாக சம்பவ இடத்திற்கு சென்றேன். சம்பவ இடத்தில் TN-04-L-4446 என்ற எண் கொண்ட ட்ரெய்லர் லாரி நின்று கொண்டிருந்தது. மேற்படி டிரெய்லர் வாகனத்தின் பின் சக்கரத்தால் ஒரு ஆண் ஏர் இறங்கப்பட்டு மூளை சிதறிய நிலையில் காணப்பட்டார். அங்கு உள்ள நபர்களை விசாரணை செய்த பொழுது, மேற்படி விபத்தில் இருந்த நபர் சாலையை கடக்க முயன்றார் என்றும் அப்பொழுது ட்ரெய்லர் வாகனம் அவர் மீது ஏறி விபத்தை ஏற்படுத்தியது என்று கூறினார்கள்.

3. விபத்தை ஏற்படுத்திய ட்ரெய்லர் லாரியை ஓட்டி வந்த நபர் சம்பவ இடத்தில் நின்று கொண்டிருந்தார். எதிரி தான் அந்த வாகனத்தை ஓட்டியவர். உடனடியாக காவல் கட்டுப்பாட்டு வரைக்கும் நான் தகவல் கொடுத்தேன். போக்குவரத்து புலனாய்வு பிரிவின் காவல் ஆய்வாளர் இரண்டு காவலர்களுடன் சம்பவ இடம் வந்தார். விபத்தில் இறந்த நபரை மெமோ பதிவு செய்து ஆம்புலன்ஸ் மூலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். விபத்து சம்பந்தமாக என்னை விசாரணை செய்தார். நான் நடந்துவற்றை கைப்பட எழுதி புகாராக கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் கொடுத்த புகார். (புகார்அ.சா.ஆ.1 ஆவணமாக குறியீடு செய்யப்படுகிறது). விசாரணை அதிகாரி என்னை விசாரணை செய்தார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-

4. எனக்கு விபத்து சம்பந்தமாக தகவல் கொடுத்த நபர் யார் என்று நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு நான் எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் மாலை சுமார் 3 10 மணியளவில் சென்றேன். புகார் சம்பவ இடத்தில் வைத்து தான் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். புகாரை நான் தான் எழுதினேன் என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரில் விபத்தை ஏற்படுத்திய வாகனம் எந்த திசையில் இருந்து எந்த திசை நோக்கி பயணம் செய்தது என்றும் விபத்தில் இறந்த நபர் எந்த திசையில் இருந்து எந்த திசை நோக்கி நடந்து வந்தார் என்ற விபரம் இல்லை என்றால் சரிதான்.

5. எதிரி சம்பவ இடத்தில் இருந்தார் என்பதை என்னுடைய புகார் மற்றும் போலீசார் விசாரணையின் போது கூறவில்லை என்றால் சரிதான். என்னுடைய சாட்சியத்தில் இருந்து எதிரியை சம்பவ இடத்தில் நான் பார்க்கவில்லை என்றும் முதல் முறையாக நீதிமன்றத்தில் எதிரியை சம்பவ இடத்தில் பார்த்ததாக உயரதிகாரிகள் கேட்டுக் கொண்டதால் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையிலேயே எதிரியை சம்பவ இடத்தில் நான் பார்த்திருந்தால் அதைப்பற்றி புகார் மற்றும் போலீசார் விசாரணையில் கூறியிருப்பேன் என்றும் அவ்வாறு நான் கூறாததால் எதிரியை சம்பவ இடத்தில் நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல.

6. விசாரணை அதிகாரி என்னை என்று விசாரணை செய்தார் என்றால் சம்பவ இடத்தில் வைத்து சுமார் 15 நிமிடங்கள் விசாரணை செய்தார். விசாரணை அதிகாரியிடம் நான் பீச் ரோட்டில் பெட்ரோல் வாகனத்தில் பணியில் இருந்தது சம்பந்தமாக ஆவணம் ஏதேனும் சமர்ப்பித்தேனா என்றால் அவ்வாறு சமர்ப்பிக்கவில்லை. விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் கூறுவது போல் அன்றைய தினம் பெட்ரோல் வாகனத்தில் பணியில் இல்லை என்றும் விபத்தில் இறந்த நபருக்கு இழப்பீடு பெற வேண்டும் என்ற எண்ணத்தில் வழக்கிற்காக தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்து போன நபரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.